இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இன்றைய தகவல் தொடர்பு வழல் அமைப்புகளில், தொழில்நுட்பம் முன்பை விட அதிகமாக தொடர்புகளை பாதிக்கிறது என்றும், அது செய்தி ஊட்டங்களை நிர்வகிக்கும் வழிமுறைகள் முதல், முழு உரைகளையும் உரையாடல்களையும் உருவாக்கும் செயற்கை நுண்ணறிவு வரை பாதிக்கிறது என்றும் 60 ஆவது உலக தகவல் சமூகத்தொடர்பு நாளுக்கான செய்தியில் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

# 60-ஆவது உலக தகவல் சமூகத்தொடர்பு நாளுக்கான கருப்பொருள்



இணையதள செயலிகள் (Julien Eichinger - Fotolia)

இன்றைய தகவல் தொடர்பு சூழல் அமைப்புகளில், தொழில்நுட்பம் முன்பை விட அதிகமாக தொடர்புகளை பாதிக்கிறது என்றும், அது செய்தி ஊட்டங்களை நிர்வகிக்கும் வழிமுறைகள் முதல், முழு உரைகளையும் உரையாடல்களையும் உருவாக்கும் செயற்கை நுண்ணறிவு வரை பாதிக்கிறது என்றும் 60 ஆவது உலக தகவல் சமூகத்தொடர்பு நாளுக்கான செய்தியில் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

மனிதர்களின் குரல்களையும் உருவங்களையும் பாதுகாத்தல் என்பதை 60 ஆவது உலக தகவல் சமூகத்தொடர்பு நாளுக்கான கருப்பொருளாக வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

இன்றைய மனிதகுலம் சில ஆண்டுகளுக்கு முன்பு கற்பனை செய்ய முடியாத சாத்தியக்கூறுகளைக் கொண்டிருந்தது என்றும், இந்த செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் செயல்திறனையும் அணுகலையும் வழங்கினாலும், நெறிமுறைகள் மற்றும் தார்மீக பொறுப்புக்கான தனித்துவமான மனித திறன்களை அவை மாற்ற முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

பொது தகவல்தொடர்புக்கு தரவு வடிவங்கள் மட்டுமல்ல, மனித தீர்ப்பு தேவைப்படுகிறது என்று வலியுறுத்தியுள்ள திருத்தந்தை அவர்கள், மனிதகுலம் வழிகாட்டும் முகவராக இருப்பதை உறுதி செய்வது சவால் நிறைந்தது என்றும், மனித குரலை அழிப்பதற்குப் பதிலாக, மனித வாழ்க்கையை இணைக்கின்ற மற்றும் எளிதாக்குகின்ற கருவிகளாகச் செயல்படும் ஒன்றாக தகவல்தொடர்பின் எதிர்காலம் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

தகவல் தொடர்பினால் நமக்கு சிறந்த வாய்ப்புகள் உள்ளன. அதே நேரத்தில், அபாயங்களும் உள்ளன என்பதும் உண்மை என்று சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை அவர்கள், செயற்கை நுண்ணறிவால் AI ஈர்க்கக்கூடிய ஆனால் தவறாக வழிநடத்தும், கையாளும் மற்றும் தீங்கு விளைவிக்கும் தகவல்களை உருவாக்க முடியும், என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் மனித குரல்கள் மற்றும் முகங்களை உருவகப்படுத்துவதன் வழியாக தவறான தகவல்களைப் பெருக்க முடியும். இது மக்களின் தனியுரிமை மற்றும் நெருக்கத்தை அவர்களின் ஒப்புதல் இல்லாமல் ஆக்கிரமிக்கக்கூடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை.

AI மீதான அதிகப்படியான நம்பிக்கை விமர்சன சிந்தனை மற்றும் படைப்புத் திறன்களை பலவீனப்படுத்துகிறது என்றும், அதே நேரத்தில் இந்த அமைப்புகளின் ஏகபோகக் கட்டுப்பாடு அதிகாரத்தை மையப்படுத்துதல் மற்றும் சமத்துவமின்மை பற்றிய கவலைகளை எழுப்புகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# திருஅவையில் யூபிலி ஆண்டு 2025 – மறைபரப்புப் பணியாளர்களுக்கான யூபிலி

அக்டோபர் 5, ஞாயிறன்று உரோம் உள்ளூர் நேரம் காலை 10 மணியளவில் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் தலைமையில் நடைபெறும் மறைப்பணியாளர்களுக்கான யூபிலி திருப்பலியில் பங்கேற்க உள்ளனர் மறைப்பணியாளர்கள்.

வத்திக்கானில் அக்டோபர் 4 சனிக்கிழமை மற்றும் 5 ஞாயிறு ஆகிய நாள்களில் மறைபரப்புப் பணியாளர்களுக்கான யூபிலியானது கொண்டாடப்படுகின்றது. சனிக்கிழமை காலை 10, மணியளவில் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் வழங்கும் யூபிலி ஆண்டு சிறப்பு மறைக்கல்வி உரையில் பங்கேற்கும் மறைப்பணியாளர்கள் நண்பகலில் புனித கதவு வழியாக நுழைந்து இறை ஆசீர் பெற உள்ளனர்.

அக்டோபர் 5, ஞாயிறன்று உரோம் உள்ளூர் நேரம் காலை 10 மணியளவில் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் தலைமையில் நடைபெறும் மறைப்பணியாளர்களுக்கான யூபிலி திருப்பலியில் பங்கேற்க உள்ளனர். நண்பகலில் மக்களிடையே புலம்பெயர்ந்தோர் மற்றும் எதிர்நோக்கின் மறைப்பணியாளர்களாக என்ற தலைப்பில் மக்கள் தினமானது காஸ்தல் சாந்தா ஆஞ்சலோ தோட்டத்தில் சிறப்பிக்க இருக்கின்றனர்.

மெரினா ராஜ் – வத்திக்கான்



வத்திக்கான் வளாகத்தில் மக்கள் (ANSA)

# மனித உறவுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது முக்கியமானது

பல்சமய உரையாடல் என்பது உண்மையானதாகவும் நன்கு வளர்க்கப்பட்டதாகவும் இருக்கும்போது, மத பரிமாணம் ஒருவருக்கொருவர் உறவுகளை பெரிதும் மேம்படுத்தி, சமூகத்தில் வாழ மக்களுக்கு உதவுகின்றது என்றும், மனித உறவுகளின் மதிப்பு மற்றும் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது இன்று மிக முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.



பல்சமய மற்றும் கலாச்சார உரையாடலுக்கான செயல்பாட்டுக்குழு உறுப்பினர்களுடன் திருத்தந்தை (@Vatican Media)

செப்டம்பர் 29, திங்கள் கிழமை வத்திக்கானில் பல்சமய மற்றும் கலாச்சார உரையாடலுக்கான செயல்பாட்டுக்குழு உறுப்பினர்களை சந்தித்தபோது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

கலாச்சாரங்கள் மற்றும் மதங்களுக்கு இடையேயான உரையாடலை ஊக்குவிப்பது ஒரு கிறிஸ்தவ அரசியல்வாதிகளுக்கு ஒரு முக்கிய நோக்கம் என்றும், மேலும் இது தொடர்பாக நற்சான்று பகர்ந்தவர்கள் குறைவில்லாமல் இருப்பதற்காக இறைவனுக்கு நன்றி என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

உரையாடலில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருப்பது என்பது நற்செய்தியிலும் அதிலிருந்து வரும் மதிப்புகளிலும் நாம் ஆழமாக வேரூன்றி இருப்பதற்கான அடையாளம் என்றும், அதே நேரத்தில், பிற பின்னணியிலிருந்து வருபவர்களுடன் திறந்த மனப்பான்மை, கேட்டல் மற்றும் உரையாடலை வளர்த்தல், எப்போதும் மனித ஆளுமை, மனித மாண்பு, நமது உறவுகள் போன்றவற்றை மையத்தில் வைத்து செயல்படுவது மிகச் சிறந்தது என்றும் கூறினார் திருத்தந்தை.

மதங்களுக்கு இடையேயான உரையாடலில் பங்கேற்பது, அதன் இயல்பால், மதம் தனிப்பட்ட மட்டத்திலும் சமூகத் துறையிலும் மதிப்புமிக்கது என்பதை அங்கீகரிக்கிறது என்றும், மதம் என்ற வார்த்தையே மனிதகுலத்தின் அசல் கூறு என்ற கருத்தை குறிக்கிறது என்றும் தெரிவித்தார்.

ஐரோப்பிய நிறுவனங்களுக்கு ஆரோக்கியமான மதச்சார்பின்மையை எவ்வாறு வாழ்வது என்பதை அறிந்தவர்கள் தேவை, அதாவது, அரசியல் துறையிலிருந்து பிரிவினை அல்லது குழப்பத்தை அல்ல, மாறாக வேறுபாட்டைப் பாதுகாக்கும் அதே வேளையில் மதத்தின் மதிப்பை உறுதிப்படுத்தும் சிந்தனை மற்றும் செயல்பாட்டு நடைமுறை தேவை என்றும் தெரிவித்தார் திருத்தந்தை.

குறிப்பாக, ராபர்ட் ஷூமன், கொன்ராட் அடினௌர் மற்றும் அல்சைட் டி காஸ்பெரி ஆகியோரின் உதாரணங்களைக் குறிப்பிடுவது மதிப்பு மிக்கது என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், உரையாடலை ஊக்குவிப்பதிலும், அனைத்து மக்களிடமும் மரியாதை செலுத்துவதிலும் செய்யும் பணிக்கு நன்றி தெரிவித்து அவர்களுக்கு ஆசீர் வழங்கினார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# போர்டிக்சன் அமல உற்பவ மாதா தேவாலயத்தில் இரத்ததான முகாமும் உணவுச்சந்தையும்

மலேசிய தினத்தை முன்னிட்டு போர்ட்டிக்சன் அமல உற்பவ மாதா தேவாலயத்தில் இரத்ததான முகாமும், பங்கு புனரமைப்புப் பணிகளுக்கு நிதி சேகரிக்கும் பொருட்டு ,வட்டார ரீதியாக உணவுச்சந்தையும் பங்குத்தந்தை அருட்பணியாளர் எட்வின் தலைமையில் தேவாலய வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 21.09.25. அன்று காலை 8 மணியிலிருந்து மதியம் 3 மணிவரை போர்ட்டிக்சன் வைத்தியசாலை, யுசிஎஸ்ஐ ஸ்ப்ரிங் ஹில் வைத்திய சாலை ஆகியவற்றிலிருந்தும் வருகைத் தந்த மருத்துவக் குழு இந்த இரத்ததான முகாமைச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தார்கள். மேலும் இந்த முகாமில் மருத்துவ பரிசோதனை, மருத்துவ ஆலோசனை மற்றும் உடல் உறுப்பு தானம் ஆகியவைகள் குறித்த சேவைகள் வழங்கப்பட்டன.

அதேவேளை உணவுச் சந்தையிலும் ஏராளமான மக்கள் கலந்து சிறப்பித்தார்கள். இதற்கான ஏற்பாடுகளைச் செய்த பங்கு இளைஞர்கள், வட்டார பங்கு மக்கள், ஏனைய இடங்களிலிருந்தும் கலந்துக் கொண்ட அனைவருக்கும் பங்குத்தந்தை, வட்டார தலைவர்கள் பங்கு மக்கள் ஏற்பாட்டுக்குழுவினர் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜோன் போல் / நிக்சன்








# புனித லூர்து அன்னை பங்கு மறைப்போதக மாத நிகழ்வுகள்

கடந்த ஆகஸ்ட் மாதம், மறைப்போதக மாதத்தை முன்னிட்டு, புனித லூர்து அன்னை பங்கு மறைப்போதகக் குழு மாணவர்களுக்காக ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தியது. இந்த நிகழ்ச்சிகளின் முக்கிய நோக்கம் மாணவர்களின் ஈடுபாட்டையும் விசுவாசத்தையும் வளர்ப்பதாகும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒவ்வொரு வகுப்புக்கும் ஏற்ற தனித்தனியான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன

முதல் வாரத்தில் நான்கு முதல் ஒன்பது வயது வரையுள்ள மாணவர்ளுக்கான கிறிஸ்துவ பாடல்கள் பாடும் போட்டிகளோடு ஆரம்பமானது. இதில், மாணவர்கள் தமிழ், ஆங்கிலம் மற்றும் மலாய் ஆகிய மூன்று மொழிகளில் பாடல்களைத் தேர்ந்தெடுத்து தங்கள் இனிமையான குரலில் பாடினர். இந்த இளம் வயதிலேயே அவர்களின் விசுவாசம் மேலோங்கியிருப்பது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருந்தது.

இரண்டாவது வாரத்தில், நான்கு முதல் ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு விவிலிய புதிர் போட்டி நடத்தப்பட்டது. இந்த போட்டி மாணவர்களின் இறைவசனங்கள் பற்றிய புரிதலை அறிந்துகொள்ளவும், அவர்களின் அறிவாற்றலை ஆழப்படுத்தவும் உதவியது.

படிவம் நான்கில் படிக்கும் மாணவர்கள் புதையல் வேட்டை போட்டியில் உற்சாகத்துடன் கலந்துகொண்டார்கள். இந்த போட்டி குழுவாகச் செயல்படுவதோடு, மாணவர்களிடையே நல்ல நட்புறவை வளர்த்தது. அத்துடன், இறைவார்த்தையைப் பகிரும் திறனையும் அவர்கள் கற்றுக்கொண்டனர்.

இறுதியாக படிவம் ஒன்று முதல் படிவம் நான்கு மாணவர்களின் வாய்மொழி புதிர் போட்டி நடைபெற்றது. மாணவர்கள் மிக உறுதியோடும் தன்னம்பிக்கையோடும் இந்த போட்டியில் சிறப்பான முறையிலும் தங்களது பங்கேற்பைக் காண்பித்தார்கள்.



இந்த முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்த பங்குக்குருவான அருட்பணியாளர்கள் கிரிகோரி சான் மற்றும் ஞானச்செல்வம், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் மறைப்போதகக் குழுவினர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார்கள். இந்த நிகழ்வுகள் அனைத்தும் முழுமையாக நடந்தேறியது என்பதைவிட, அவை ஒரு சிறந்த அனுபவத்தையும் மறக்க முடியாத நினைவுகளையும் வழங்கின. இந்த மறைப்போதக மாதம் ஒரு அர்த்தமுள்ள மாதமாக அமைந்ததுடன், கடவுளுடன் மாணவர்களின் விசுவாச உறவை உறுதிப்படுத்த ஒரு ஊன்றுகோலாகவும் இருந்தது.

ஜெஸிலின் பியர்சன் - புனித லூர்து அன்னை பங்கு

# பொதுக்காலம் 28ஆம் வாரம் - ஞாயிறு 12 -10-2025

## செய்ந்நன்றி மறப்போருக்கு மாட்சியில்லை!

இன்று பொதுகாலத்தின் 28-ஆம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். இன்றைய முதல் வாசகத்தின் கதாநாயகன் நாமான். இவர் சிரியா நாட்டுப் படைத்தலைவர், 'வலிமைமிக்க வீரரும் மதிப்பிற்குரிய தலைவரும் ஆவார். ஆனால், தொழுநோயாளர். இவருடைய வீட்டில் ஓர் இஸ்ராயேலைச் சேர்ந்த சிறுமி அடிமையாக வேலைப்பார்த்து வந்தாள். அவள் நாமானின் மனைவியிடம், 'என் தலைவர் (நாமான்) சமாரியாவில் இருக்கும் இறைவாக்கினரிடம் சென்றால் அவர் இவரது நோயைக் குணமாக்குவார்' என்று கூறினாள். நாமான் தன்னை தன் குடும்பத்திலிருந்துப் பிரித்து, அடிமையாக நடத்தி வருகிறானே, என்ற கோபம் அவளுக்கு இல்லை.

அந்த அடிமைச் சிறுமியின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து நாமான் சிரியா நாட்டு அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு இஸ்ரயேலுக்குச் சென்று, இறுதியில் நலமைடைகிறார். 'இஸ்ரயேலைத் தவிர வேறு எந்த நாட்டிலும் கடவுள் இல்லை என உறுதியாக அறிந்துகொண்டேன்' என்கிறார்.

இரண்டாம் வாசகத்தில், திமொத்தேயுவிடம், தன்னுடைய நம்பிக்கையால் கடவுளிடம் திரும்பி வர வேண்டும் என்று சொல்வதோடு, இதையே அவர் தன்னுடைய சபையிலும் கற்பிக்க வேண்டும் என்றும் பவுல் அறிவுறுத்துகிறார்.

நற்செய்தியில் இயேசுவிடமிருந்து நலம் பெற்றவர்களில் சமாரியர் ஒருவரைத் தவிர மற்ற ஒன்பது பேர்களும் யூதர்கள். ஆனால், திரும்பி வந்து இயேசுவுக்கு நன்றி சொன்னவர் அந்த சமாரியர் மட்டுமே. இதன்வழி, நன்றியுணர்விற்கும் நலமான வாழ்விற்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பிருக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

யாரையும் இயேசு திரும்பிவரச் சொல்லவில்லையே. சமாரியர் மட்டும் ஏன் இயேசுவிடம் திரும்பினார்? ஒன்று மட்டும் நிச்சயம். இவர் மற்றவர்களைப் போல இருக்கவில்லை. வித்தியாசமாக இருந்தார். ஒன்பது பேரும், தாங்கள் நலமானதைக் குருவிடம் காட்டி விடு திரும்புவதில் குறிக்கோளாக இருந்தனர். குருவைத் தேடிச் சென்றனர். சமாரித்தனோ (இயேசுவை) கடவுளைத் தேடி வந்தார். இதுதான் அந்த வித்தியாசம். முதலில், 'இயேசுவே நலம் தந்தார்' என நம்புகிறார்.

அந்த சமாரித்தன் முதலில் இயேசுவிடம் வந்தபோது உடல் நலம் பெற்றார், திரும்பி வந்தபோது உள்ளத்திலும் நலம் பெற்று முழு விடுதலையும் பெறுகிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். முழு மனித விடுதலை என்பது உடல் நலம் மட்டும் அல்ல உள்ள நலமும் சேர்ந்ததுதான். இயேசு அளிக்கும் விடுதலை முழு மனித விடுதலை. நமது அன்றாட வாழ்விலும் கடவுள் பல வழிகளில் நமக்கு நலமளித்து, பாதுகாக்கின்றார். நமக்கு, அவரால்தான் எல்லாம் என்ற உறுதியான நம்பிக்கை வேண்டும் - இந்த நம்பிக்கை நாமானுக்கும், பவுலுக்கும், திமொத்தேயுவுக்கும், சமாரியருக்கும் இருந்தது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு (குறள் 110)

ஆம், எத்தனை பெரிய அறங்களை அழித்தவர்க்கும் பாவத்தைக் கழுவ வழிகள் உண்டு. ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்து தீமை செய்பவனுக்கு வழியே இல்லை, என்றிருக்க, கடவுள் செய்துவரும் நன்மைகளை மறந்தோமானால், நாம் நன்றி மறந்தவர் ஆவோம்.

ஆர்.கே. சாமி, காஜாங்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.